# ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ

இயற்றிய

# பக்திப் பாமாலை




தொகுப்பாசிரியர்
டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா

# ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ
இயற்றிய
# பக்திப் பாமாலை

**ஸ்வாமிஜியின் 124ஆவது ஜெயந்தி விழா**
13-1-2019, ஞாயிற்றுக்கிழமை

தொகுப்பாசிரியர்
**டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா**

வெளியீடு
**யோக ப்ரயாகா**
12/16, டானியல் தெரு, ஆதம்பாக்கம்,
சென்னை 600 088. கைப்பேசி : 92821 04459

ஒளியச்சு & அச்சிட்டோர்
பரணி கிராபிக்ஸ்
இராயப்பேட்டை, சென்னை 14.

## என்னுரை

வணக்கம்.

ஸ்வாமி விலக்ஷணானந்தரின் 124ஆம் ஆண்டு ஜெயந்தி விழாவில் வாசக அன்பர்களை மீண்டும் சந்திப்பதை பெரும் பாக்கியமாகக் கருதுகிறேன். ஸ்வாமிஜி பல பொக்கிஷங்களை உரைநடையாகவும் பாடல்களாகவும் வெளியிட்டுள்ளார். அவர் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு ரத்தினமாகும். அப்பாடல்கள் அவரை ஒரு சிறந்த ஆசுகவி என்று பறை சாற்றுகிறது.

இந்த முறை அவர் பல தெய்வங்களைக் குறித்த பதிகங்களையும், அவர் பலமுறை தவம் செய்யச் சென்ற குமாரதாரா வீழ்ச்சி பக்கத்திலுள்ள குகைகளில், அவரது வழக்கமாகும். ஒருமுறை மலையேறி கொண்டே பாடிய ‘தபோநாதம்’ என்ற உன்னத படைப்பையும் அதைத் தொடர்ந்து முடிவில் அவருடைய சில வாழிப் பாட்டுக்களுடன் நிறைவடைகிறது.

அந்தப் பாடல்களிலெல்லாம் இறைவன், இறைவி இவர்களின் மகிமைகளை விவரிப்பதுடன் தெய்வ வழிபாட்டில் இருக்க வேண்டிய பக்தி பாவத்துடன் சரணாகதி தத்துவத்தையும் இணைத்து ஒரு ஜீவனுக்கு ‘பெரும் பேறு’ அடைவதே குறிக்கோளாகக் கொள்ள வேண்டிய யதார்த்தத்தையும் உணர்த்துவதைப் பார்க்கும்போது நாம் நம்மை முழுவதுமாக இறையில் கரைவதை உணர்கிறோம்.


அவருடைய இப்பாடல்களை அறிமுகம் செய்து அதை நாம் அனுபவித்து இறையருளைப் பெற்று பெரும் பேறு பெறுவோமாக.

– டாக்டர் திருமதி அனந்தகிருஷ்ணா

சென்னை, நங்கைநல்லூர், பொங்கி மடாலயம், ஸ்ரீ ஸாதுராம் ஸ்வாமிகள்

நம் **ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாமாஜீயைப்**

போற்றி பாடிய பாடல்



சத்குரு ஸ்வாமி ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜி
(1894 - 1945)

உ

ஸ்ரீ பொங்கி க்ருபா

## ஸ்ரீ விலக்ஷணானந்தர் துதி (9-12-1959)

அருட்கவி (எஸ்.வி. சேதுராமன்)

**தவத்திரு ஸாதுராம் ஸ்வாமிகள்** ஆசு கவியாகப் பாடியது

மான்மாயில் மெய்ஞ்ஞானம் வந்ததென
அறிவித்த வள்ளல்! போற்றி!!
நான்மாயில் மமகாரம் அறில்முக்தி
எனச்சொற்ற நல்லாய்! போற்றி!!
ஏன்மாயில் எனக்கென்றே அதை உதறித்
தள்ளியஎம் எம்மான்! போற்றி!!
மேன்மாயில் மேவிய விலட்சணா
நந்தகுரு விமலா போற்றி!

தத் ௐ ஸத்



## ஐந்து வித நமஸ்காரங்கள்

ஐந்து வித உத்தேசங்கள்

### முதலாவது நமஸ்காரம் – உலகத்திற்காக

உலகம் முழுமையும் உஜ்ஜீவிக்கும் பொருட்டும் பாரத நாடும் அதன் ஹிந்து வைதீக ஆர்ய தர்மங்களும் மதாசாரங்களும் சர்வ ஜாதி ஜனங்களும் எல்லாவித க்ஷேமங்களையும் அடையும் பொருட்டும்.

தெய்வீக பலங் கொண்ட வீர்யமான பாரமார்த்திக ரக்ஷகச் சக்கிரவர்த்தி பாரத நாட்டை ஆளும் பொருட்டும்.

தற்போதுள்ள ஸ்தூல சரீர மாதா பிதாக்களும் பல முன் ஜென்மாந்தர பிதா மாதாக்களும் பிதுர்க்களும் பகவானது கிருபையைப் பெற்று உஜ்ஜீவிக்கும் பொருட்டும் குடும்ப புத்திரதாரதன க்ஷேமாதிகளை உத்தேசமாகவும் முதலாவது மானுஷிக நமஸ்காரம்.

## இரண்டாவது நமஸ்காரம் – தனக்காக

சாக்ஷாத்கார யோக ஞான முயற்சி செய்யும்போது எந்தவிதங்களினாலோ வரக்கூடிய எல்லாவிதத் தடைகளும் நிவிர்த்தியாகும் பொருட்டும்.

ருக்கு யஜுர் சாமம் அதர்வணம் என்ற சதுர் வேதங்கள், ஆகமம், புராணம், சாஸ்திரம், வேதாங்கம், இதிகாசம், ஸ்மிருது இவைகளும் எவ்வித இடையூறுமின்றி உலகில் சஞ்சரிக்கும் பொருட்டும்.

காரண குருவையன்றி மற்ற குருமார்கள் சகல ரிஷிகள் தேவர்கள் ஞானிகள் இவர்களின் க்ஷேமங்களை உத்தேசித்தும் இரண்டாவது தெய்வீக நமஸ்காரம்.

## மூன்றாவது நமஸ்காரம் – உபாஸனா மூர்த்திக்கு

ஆதி முதல் அந்தம வரை பல ஜென்மாந்தரங்களாகக் கிருபை பாலித்து வந்தவரும்.

பிறவாத மோக்ஷத்திற்கு வழிகாட்டியுமாகிய சகுண நிர்க்குண வடிவ உபாஸனா மூர்த்திக்கும் பஞ்சமூர்த்திகளுக்கும் பராசக்திக்கும் பரமாத்மாஜீ ஆரம்பித்திருக்கிற தபோ கார்யங்களும் அதன் அந்தரங்க எண்ணங்களும், முழு ஜெய மடையவதற்காகவும் மூன்றாவது அவாந்தர அசல நமஸ்காரம்.

## நான்காவது நமஸ்காரம் – காரணக் குருவுக்காக

பரமாத்மா பரமேஸ்வர பரப்பிரஹ்ம பாரமார்த்தீக வடிவமான தனது காரண குருவின் தீர்க்கமான காருண்யத்தைப் பெறுதற் பொருட்டும் பாரத நாட்டு ஆர்யப்



பிரதேச ஆசார்யர்களது அந்தரங்க எண்ணங்களும் செழித்தோங்கும் பொருட்டும் போலி ஆசாரியர்களின் புற மதத்தின் எண்ணங்களைப் புகட்டுகிற குருமார்கள் இவர்கள் மதம் நமது நாட்டில் பரவாதிருக்கும்படியும் சகல மதாசாரியர்களுக்கும் நான்காவது காருண்ய நமஸ்காரம்.

## ஐந்தாவது நமஸ்காரம் – கடவுளுக்காக

சர்வ வியாபக சமரஸ அவாங் மனோ கோசர நித்தியானந்த திவ்ய மங்கள் அப்ராகிருத விக்ரக சொரூபமாகிய பரம் பொருளுக்கு ஐந்தாவது அகண்டாகார நமஸ்காரம்.

## அர்ப்பணம்

இந்த ஐந்துவித நமஸ்காரங்களின் எதார்த்தமான புண்ணியங்களின் பிரயோஜனத்தை எனது உபாஸனா மூர்த்த வடிவமான கடவுளுக்கு அர்ப்பணம் செய்து விடுகிறேன்.

ஓம் தத் ஸத்

1–1–1937 – விலக்ஷணானந்தர்

ஓம் தத் ஸத்

ஸ்ரீ வெங்கடேஸ்வர பரப்பிரஹ்மணே நம :



ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ திருமலையிலிருந்து சுமார் பத்து மைல் தொலைவிலுள்ள குமாரதாரா என்ற அருவியில் அமைந்திருக்கும் குகையில் பலமுறை தவமியற்றி உள்ளார். அவ்வாறு 1923ஆம் வருடம் ஸ்ரீ ஸ்வாமிகள் திருமலைக்கு ஏறி சென்ற போது "ஸ்ரீ வேங்கடேஸ்வர தபோ நாதம்" என்ற பாடல்களை திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

## ஸ்ரீ வேங்கடேச தபோ நாதம்

### ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ திருவாய் மலர்ந்தருளியது

கிரேதாவில் தோதாத்திரி திரேதாவில் சேஷாத்திரி துவாபாராவில் அஞ்சனாத்திரி கலியில் வெங்கடாத்திரி என்று பெயர் வாய்ந்துள்ள திருவேங்கட பருவதத்தில் ஸ்ரீனிவாசப் பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிரா நின்ற க்ஷேத்திரத்திற்கு உத்தர திசையில் ஒரு யோஜனை தூரத்தமைந்துள்ள சனத்குமார தீர்த்தக்கரையில் தபசு செய்யப் புறப்படுமுன் ஸ்ரீ விலக்ஷணானந்தர், மலையின் கீழிருந்து மேல் வரும்போதே திருவாய் மலர்ந்தருளிய தபோ நாதம்.

1. ஓமெனும் மொலியினோடு வுனாதுரு மனத்துள் வைத்துக்
காமமே முதல நீத்துக் கடக்கரு மைந்தடக்கி
ஓமமேசெய்து அத்தை உரகமா மலைமேல் வந்து
தாமமே துளபமார்பா தவஞ்செய வருகின்றேனே.



2. பற்றெல்லாமுளைத்தோர் சில்லோர் புவியினை மறந்தோர் சில்லோர்
பற்றெல்லாம் விட்டோர் சில்லோர் சியினைத் துறந்தோர் சில்லோர்
கற்றதை மறந்தோர் சில்லோர் கடுந்தவம் புரிக்னிறார்கள்
மற்றதை வேண்டியானே மலைமிசை வருகின்றேனே.

3. சேடனார் மலைமேல்வாழுஞ் சீதரா நின்னையன்றி
ஏதுமோர் நினைவுமில்லே னிச்சையா லுள்ளம்வாடிப்
போதற னினக்கு நன்றோ புந்தியிற் றவத்தைநாடிச்
சாதகஞ் செயவேநின்றன் சந்நிதி வருகின்றேனே.

4. அன்னமு மாடையின்றி அணிகொள்கோ வணமுமின்றிப்
பன்னிய காற்றுமின்றிப படர்சருகின்றி மேலாய்த்
துன்னிய நினைவுமின்றத் தொடர்ந்திடும் தவமேசெய்யப்
பன்னரும் பெரியோர் நின்றன் பருவரை வருகின்றேனே.

5. தேவர்கள் முனிவர்சித்தர் திரளெலாங் கூடிநின்றும்
ஆவலாற் றவஞ்செய்கின்ற அனந்தன்மா மலைமேல் வாழுங்
காவலா நினதுபாதங் கருத்திடை நாட்டியந்தோ
பாவனா ரூபமாகப் பயப்படத் தவஞ் செய்வேனே.

6. கண்ணினாற் காதாலுள்ளங் காணொணாக் கதியே நின்னை
எண்ணினாலறிவதுண்டோ இச்சையே தொடர்ந்து நின்று
பண்ணுலாம் புவன நீத்துப் பாந்தளின் கிரிமேல்வந்து
உண்ணலா விரதமாக உயர்தவஞ் செய்கிறபேனே.

7. வாக்கினை மவுனமாக்கி மனத்தினை நினையாதாக்கி
ஆக்கையை யழியாதாக்கி அந்தரத்தேகும் யோகம்
போக்கிலே போகவிட்டு பூந்துழாய் மார்பநின்னை
ஆக்கமோ டறிவதாக அடியிணை வருகின்றேனே.

8. சருகினைப் புனலைக்காற்றைச் சந்திரன் கிரணந்தன்னை
பருகியோர் நினஷவுமின்றிப் பருப்பத வரைமேனின்று
கருதியே நினதுரூபங் கண்டவர் வெருவுங்கொள்ள
நிருமல நின்றன்பாத நிழலடி வருகின்றேனே.

9. கடும்புலி சிங்கம்யானை கடுவுரை கானகத்தே
இடும்புலி யகத்தையாக்கி யீசனே நினைதுபாதம்
தொடும்படி யைந்தடக்கி தூயதாந் தவமே செய்ய
விடும்படிவருவே னல்லேன் வேங்கடத்துறையு மெந்தாய்.

10. அகத்தியன் முதலாமுன்னோ ரருந்தவச் செயலைக்கேட்டு
அகத்திலே யச்சமீற ஆயிரந்தலையான் வெற்பில்
புகப்புக நேமிகொண்ட புனிதனே புரவலோனே
நகத்துயர் வரையின்மீதே நணுகுவேன் றரிசிப்பேனே.

11. சுகர்முதல் முனிவரெல்லாஞ் சுந்தர யோகஞ்செய்யு
நகமிசை நானும்வந்தால் நாயக வேற்றிடாயோ
பகவனே யிடபவெற்பின் பாகனே தவமே செய்யு
மகமுடன் வருகின்றேனா னாண்டவா வாட்கொளாயே.

12. பலபலபுகன்று மென்ன பரிபவமிதன் மேலுண்டோ
மலைமிசை மனது ஆசை மாற்றியே கடுமையான
சிலையெனுந் தவமே செய்வேன் சீவனைவிடுவே னன்றித்
தலமிசை வருவதுண்டோ தரணமிமா துடையகோவே.



13. உன்னைநா னேரேகாண்பே னல்லது வுடலை நீப்பேன்
பன்னக மலைமேலின்னும் பத்துநாட் சென்ற பின்னே
முன்னநான் வந்தவாறு முகுந்தவங் கேறிநின்றா
லென்னை நீ அழைத்திடாயோ வெங்குமாய்
நிறைந்ததேவே.

14. கௌசிகன் முதலாமுத்தர் கடுந்தவஞ் செய்யா நின்றார்
கௌமதிக் கரையின் மேவிக் கரியதா நினதுஜோதி
பௌவிய மாக்கநின்ற பான்மைபோ லடியேனேனு
நௌமிய மகற்றுகிற்பேன் நான்முகன் தந்தையாறே.

15. எண்ணங்க ளெல்லாமின்றி இச்சையோ ரணுவுமின்றித்
தண்ணருந் தவமேசெய்யத்தனியனாய் வாராநின்றேன்
மண்ணந் தருளுமாஸயோய் மாதவா மலைமேல்வாழுங்
கண்ணனே கலந்தபோதுன் கழலடி மறந்திடேனே.

16. தவஞ்செய விடையூறாகத் தரணியோ ரெவர்களேனு
மவஞ்செயு மரம்பைமாத ராயிரங் கண்ணனேவா
லவண்புகுந் திட்டானின்னை அச்சுத வழையா நிற்பேன்
பவந்தனைப் போக்கவல்ல பரமசாந் தத்தின்மேலே.

17. உணவின்மே லெண்ணமின்றி வுறக்கமு மின்றிநின்னைக்
கணமதாம் பௌதேனுங் கறந்திடா மனத்தினாலே
மணமலி மார்பா நின்னை மதியிடை யாக்குதற்கே
பணவர வுயர்ந்தபாந்தட் பருவரை வருகின்றேனே.

18. அஞ்சனாதேவி முன்னா ளருந்தவஞ் செய்தகானம்
கஞ்சநாண் மலரோன் றன்னைக் கருத்தினாற்
படைத்தமாலே
செஞ்சரணத்தை யானுஞ் சித்தத்தே யிறுக்கவல்லேன்
அஞ்சலென் றருளாயையா அனந்தன்மா மலையுளானே.

19. நரனநாராணனுமாகி நானிலந்தனைத் துறந்து
இரவுமே பகலுமின்றி யிமயமா கிரியிற் சார்ந்து
விரவருந் தவமே செய்தார் வேங்கட மலைமேல்வாழு
மரவமர் பள்ளியானே அடியனேற் கமைந்ததேவே.

20. பன்றியா யுலகங்கீண்டு பாரினை நிலைநிறுத்து
மற்றுளார் தவனேநின்னை மனத்திஷ யசையாதாக்கி
வென்றுளே புலன்களைந்தார் வேள்விசெய் தவருங் காணா
நன்றுநான் மறைக்கு மெட்டா நற்றவம் புரிகிற்பேனே.

21. சித்தியை வேண்டியல்லேன் சிதறிடும் பொருள்கட்
கல்லேன்
சத்தியை விரும்பியல்லேன் சறங்கற்பமொன்று மில்லேன்
புத்தியை நாயல்லேன் பூமியைக் கருதியல்லேன்
முக்தியை வேண்டியாங்கே முயலுவேன்
றவஞ்செய்வேனே.

22. நாரதன் றனக்குந்த நற்றவமணியே நின்னைக்
காரினை நிகர்த்தநீலக் கருமுகில் போலவெண்ணிப்
பாரினிற் சேடவெற்பின் பக்கலே வாராநிற்பேன்
மாரனுக் கருளுமெந்தாய் மருளினை யகற்றிடாயே.

23. மஞ்சன வரையாமேனி மரகதப் பசும்பொற்குன்றம்
விஞ்சிய தென்னநின்ற விமலனே வேங்கடப்பேர்
அஞ்சிறை வண்டுவூது மலர்மகட் கிறைவா நின்னைத்
தஞ்சமென்றடையா நின்றேன் தத்துவங் கடந்தகோவே.

24. மனத்தினை நிறுத்திநின்றன் மகத்துவம் வெளியதாகப்
பஷனத்துழாய் மார்புன்னை பூகமும்பலாசம் வேங்கை
கனத்துவர் கோங்குசாலம் கலந்தநின் றிருமலைக்கே
கனத்துடன் வாராநின்றேன் கற்பனை யகற்றுந்தேவே.



25. உடம்பினோ யகற்றவல்ல உத்தம தீர்த்தமொன்று
அடர்செயுங் காமநோயை யகற்றிடுந் தீர்த்தமொன்று
தொடர்பவந் தனையேயோட்டுந் தூயமா தீர்த்தமொன்று
கடவுளே நினதுபாதங் கலந்திடுந் தீர்த்தமொன்றே.

26. போனகம் பெண்டிர்மக்கள் புவியினின் மாடகூடம்
தானனி முயலுஞ்செல்வம் சதுர்மறை வேள்வியோகம்
வானமே லோடுஞ்செய்கை வழியறிந் தவர்க்கேயில்லை
ஆனதா லடியேநின்ற னடியிணை வருகின்றேனே.

27. கலங்கிய விதயமின்றிக் கடுத்தவம் புரியாநின்று
தலங்கறே யெலாமகற்றித் தடவரைக் கிரியினாப்பண்
மலங்களைக் களைவான்வேண்டி மாதவா வாரா நிற்பேன்
இலங்கிய மார்பவென்னை யெங்குமாய் நிறையச்செய்யே.

28. உலகத்தோ ரென்னைக்கண்டு உயர்ந்தவரென்ன
வேண்டாம்
பலகலை கற்றுத்தேர்ந்த பண்டிதர் புகழவேண்டாம்
நலமலி தேவர்சித்தர் நல்லவ ரென்னவேண்டாம்
அலர்மகள் மணாளநீயே அணைத்திட வேண்டுமன்ற.

29. பலபல ஜன்மமாகப் பாரினிற் பிறந்துழன்று
சலனமே பழகிவந்து தவத்தினை மறந்துநின்றேன்
உலவிலாப் பெரியோர்வாழு முன்னுடை மலைமேலுற்று
நிலைபெருமனத்தினோடு நிகழ்தவம் புரிகிற்பேனே.

30. புற்றுளே தவஞ்செய்தார்கள் புவியினிற் புதைந்துசில்லோர்
பற்றெலா மறுத்து நீத்துப் பருப்பதக் கிரிமேலேறி
உற்றசை யாதுநின்று உயர்தவம் செய்தார் சில்லோர்
மற்றுநா னென்செய்கேனோ மலைமிசை வருகின்றேனே.

31. தவத்தினுக் கிடையூறாகத் தானவர் அரக்கர்தேவர்
உவப்புறு மரம்பைமாதர் உற்றுயென் றனைமயக்கிப்
பவப்படச் செய்கிற்பாரேல் பருப்பத ஜோதிநீயே
அவணெழுந் தருளியென்னை யாண்டிடல்
வேண்டுமன்றே.

32. சாகர ஆழுங் காண்பேன் சகத்தினி னெல்லைகாண்பேன்
பாகமா மரவங்காண்பேன் பாசத்தின் முடிவுங்காண்பேன்
வேகமா முடலங்காண்பேன் விளைகின்ற
தொழிலுங்காண்பேன்
நாகமா மலைமேல்வாழு நாயகநினைக் காண்பேனே.

33. வடமலைவாழ் பெருமானே வானோர்க்கு மென்றனக்கு
மிடமளிக்கு மெம்பரனே இகநிலைமை பரநிலைமை
படவரவிற் றுயில்பரமப் பாண்டியனே நின்மலைக்கே
திடமுடனான் வருகின்றேன் தேசிகனே சேர்ந்தருளே.

34. சித்தசாந்தம் பெறவில்லை சீனிவாசப் பெருமானே
அத்திகிரி மேனின்றருளு மையாநினக் கடித்தொண்டு
முத்திபெறவே முன்னாளின் முயன்றுமுடித்தே
னித்தருணஞ்
சித்திநிலைக்கே சேடகிரி சேர்வேனினது பாதாம்புயமே.

35. புத்தியுள்ளே நீ நுழைந்து புவனமுழுது மாள்கின்றாய்
மெத்தஅரச ராள்வதெல்லா மேலேமினனுக்கென்
றறிந்திட்டேன்
அத்தியழைக்க வரும்பரனே அயனார்ர தனக்கு மன்பான
சத்தியுடைய வேங்கடவா தானேவருவே நின்கிரிக்கே.



36. பொல்லாவுலக மாயையினைப் புரட்டியோட்டி அகற்றிடவே
வல்லாநினது அருள்வேண்டும் வடவேங்கடமா
மலைக்குகையில்
நில்லாமனத்தை மிகநிறுத்தி நியமத்தோடு தவஞ்செய்து
மல்லார் திண்டோள் மணிவண்ணா மாலேநின்னை
யடைவேனே.

37. அறுபானான்கு சித்தியெலா மகத்தேவேண்டே
னருந்தவமே
புரியாநின்று அகமடக்கிப் பொன்போல் மேனியம்மையுடன்
கரியோய்நினது காக்ஷியதே காணவேண்டு
மென்கின்றேன்
விரையார்நிமலி மணவாளா விரும்பியாங்கே
அணைகுவேனே.

38. அருங்காற்றும் பிடிசருகும் அங்கையிலே தண்ணீரும்
விரும்பாத உணவாக்கி வித்தகனே வேங்கடவா
கரும்பாம்பின் குதலைமொழிக் கனகமணி யென்னம்மை
வரும்போது காண்பேனான் வானவர்க்கும் வானவனே.

39. உடம்பெல்லா மிளஷத்தாலு முயிரகன்று போனாலும்
நடம்பயில நின்றாலு நானெது வுள்மனத்தை
அடங்குமுறை தான்கண்டு அருந்தவமே செய்திடுவேன்
படவரவின் மலைமீது பற்றாது வருவேனே.

40. உள்ளூறி மனந்ததும்பி ஓங்காரத் தொனியெழுப்பி
எள்ளூறும் படிமனத்தை இந்தியத்தோடே நிறுவிப்
புள்ளூரும் பெருமானே பூரணியெம் பெருமாட்டி
வெள்ளூற வந்திடுவேன் வேங்கடமா மலைமேலே.

41. ஆயிரந் தலையான் மீது அணிகொள்மா மண்டபத்தே
மாயிருள் மாயைநீக்கி மற்றவ ரருகிற்சூழ
ஒயுமாகடலி னொன்றி உயர்திரு மலைமேநின்ற
தாயினுஞ் சிறந்ததேவே தமியனேன் வருகின்றேனே.

42. பெற்றாளென்னை யலர்மங்கை பெருமா னீயேயென் றந்தை
வற்றாவமுத வாரிதியே வானோர் தலைவா வேங்கடனே
கற்றாநெறியிற் கண்டுயிலேன் காணாதிருக்கப்
பெருவேனேல்
சற்றேபொருக்க மாட்டேனான் சகமேலுயிரை விடுவேனே.

43. ஜாபாலி வியாசன்போகன் சாதனை செய்தகானம்
ஆபாதசூட சித்தன் அரவரச னந்தன் கானம்
கூபாளி முனிவன்கூற்றன் குதம்பைய ரிந்தகானம்
நாபா தி நளினயோக நாரதன் வனஞ்செல்வேனே.

44. வேங்கடமலை மேல் வாழும் வித்தககா இவ்வுடம்பின்
பாங்கிலே நீ யிருந்து பத்து நேர் நிமிடத்துள்ளே
வாங்கிடு வலியனைத்தும் வழக்கமே யாகினாலு
மேங்கு வேனல்லேனீச வென்னுளே யமைந்த தேவே.

45. அனித்தயப் பொருளைநாடி அகண்டமா நின்னிடத்தே
தனித்து நான் கேட்பேனல்லலேன் தரணியின் வாழ்வும்
வேண்டேன்
இனித்துய ரொன்றுமில்லே னெம்பெருமானே யென்னை
மனத்து ளேயகற்றிவைத்தால் மற்றினி யென் செய்வேனே.

46. மாதவா விருடீகேசா மறைபுகலாத தேவா
சீதரா துளபமாலே செய்வதுஞ் செயா தாயு
மேதுவு மிலாத நாயே னென் செய்வேனிகலோகத்தின்
மீதிலே யிச்சையில்லேன் மேதினி யரசிவாழ்வே.



47. ஆதி நாராணனே யன்பே ஆருயிர்க்கரசே யான்ம
போதகே புத்தயோக பூரணானந்த மார்க்க
வேதுவே யிமையோன் கன்னி இச்சையே இந்திராவின்
சாதகமணவாளா நின் சன்னிதி யடையவே னின்றே.

### பரத்துவ நிச்சயமும் தன்னனுபவமுங் கூறல்

48. அரவணை யமர்ந்துமான்ம வறிவினாற் றிருமலைக்கே
கரமது நான் கோடுற்றுக் கருணையின் சொரூபமாகி
இரவு நேர் பகலுமின்றி யிலங்கிடு மனுபவத்தைத்
திரமுட னெனக்களித்த தேவனே தெளிவலேனே.

### சர்வ ஜீவ தயாபர சொரூபத்தைக் காண்பித்தல்

49. நான்முகன் தித்திரீயன் நாரதன் ஜனகன் போதன்
வான்முகச் சனத் குமாரன் வானவர் தலைவன் காமன்
மான்முக விருடி மாலோன் மந்திரசொரூபி தந்த்ரி
தேன்முகம் வடியுநாதன் தேடினின்றிரு வடிக்கே.

### க்ஷீரப்தியின் அந்தர்முகப் பிரார்த்தனை

50. பாற்கடற் கரையினின்று பரமனே பரமயோகி
ஏற்படு மின்ப துன்ப மெத்தனை யென்பேனம்மா
நாற்பெருஞ் சனமுற்ற நாட்டுளோர் நலனே யெய்த
போற்றிரு வேங்கடத்தே புண்ணிய வருதல் வேண்டும்.

### சுகுண நிர்க்குண சொரூபத்தால் பவத்துன்ப மொழித்தல்

51. நீலநேர் மேனியோடு நிர்க்குண வமைவினோடு
காலமே கடந்தமோன காரணன் கருடனேறி
மாலவன் சேடவெற்பின் வந்தநாளிந்த நாளே
சூலவன் தொடராவண்ணந் துலங்கிடவருள் செய்தானே.

### திருவேங்கடகிரியின் மகத்துவ முணர்த்துதல்

52. கிழவனைக் குமரனாக்குங் கேடிலாத் தீர்த்தமொன்று
அழகிலா வொருவன்றன்னை யனங்கனா யாக்கு
மொன்று
பழைய தோரஞ்ஞானத்தைப் பாறிடச் செய்யு மொன்று
விழைவதை யுணர்ந்து மொன்று வேங்கடமலை மேலம்மா.

### தன்னனுபவமுந் தாயாரருளுங் காட்டல்

53. உணவின்மே லெண்ணமில்லே லுறக்கமு மில்லேனீச
கணமது முனைப்பிரிந்து கண்டிலேன் கமலரூப
மணமலி யெனது மாதா மாற்றிலா வுளத்தினாலே
குணமது கடந்து நின்றேன் குன்றம தெடுத்த கோவே.

54. ஆதிநாராயணனே போற்றி அலர்மேலு நாதா போற்றி
வேத பூரணனே போற்றி வேங்கடத் துறைவாய் போற்றி
போதலர் பொருளே போற்றி புண்ணிய சொரூபா போற்றி
சீதரா துளபமாலே திருவடி போற்றி போற்றி.

ஓம் தத் ஸத்

5927. 60. 11. 23 – ஞாயிறு காலை 10 நாழிகை



ஓம் தத் ஸத்



ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்ம ஸ்வாமிகள் அருளிய

# செல்வ விநாயகர் திருப்பதிகம்

வேலூரிலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் சேண்பாக்கம் என்ற ஊரில் அருள்பாலிக்கும் அருள்மிகு செல்வ விநாயகர் மீது இயற்றியது. **பஞ்ச பூதங்களில் பிருதிவியுடன் ஒப்பிடும் இந்த விநாயகர் ஸ்வயம்பு மூர்த்தி**. பதினேழு விநாயகர்கள் ஓங்கார வடிவில் காட்சி தருவது இக்கோயிலின் சிறப்பு. சந்நிதி விண்வெளியில் விமானம் இல்லாமல் விண்ணை நோக்கி திறந்து உள்ளது. இங்கு தியானம் சிறந்த முறையில் அமையும். இத்தலத்தின் மஹாத்மியத்தை **ஸ்ரீ காஞ்சி பரமாச்சாரியார்** அவர்களின் ‘தெய்வத்தின் குரல்’ என்ற புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அதன் மஹிமையை எடுத்துக்காட்டுகிறது. இத்தலம் **ஆதிசங்கரர்** பூஜித்த இடமாகும்.

திருவேங்கடத் துறையுந் திருமருவுந் திருமார்பன்
மருமலிந்த மலர்சோலை சேண்பதியில் வாசமிகு
வரமிகுத்த அனவரத செல்வமா வினாயகனே
குருவருளால் குருபாதங் கொண்டடியேன் கூறுவனே.

அனவரத வேங்கடவனருள் பொழியு மருமகனே
கனமிகுந்த கணபதியே காருண்யரூப மறை
அனவரத வினாயகனே அழியாத பரம்பொருளே
நினையறியும் பதிகளிலே நீள்காலம் முயல்வேனே.

எட்டினை யேழிலாக்கி யிருபத்து மூன்றுங்காட்டி
அட்டமா யோகமாக வருந்தவம் புரிந்த ஞானம்
தொட்டவர் விளங்குந்தூய மெய்ஞ்ஞான துரியஜோதி
வட்டமாந் தேவதேவ மலரடி வணங்கினேனே.

ஒன்றிரண்டு மூன்றாக வோங்காரத் துச்சியிடை
நன்றுடனே தீதுமில்லா நாயகனே மோனத்தில்
சென்றுவளர் தேவா நின்சீரடியை போற்றிநிதம்
துன்றுபிணி முதலியவாந் துயரமதை நீக்கிடுவாய்.

என்மனைவி யென்சுற்றம் என்வீடு யென்செல்வம்
என்னூரு மென்னாளு மெல்லாமு மோங்கிடுக
தன்னூரிற் கைலாய தற்பரனார் தன்குமரன்
மன்னிடுமா மாநிலத்து மாணிக்க நாயகமே.

இரவும் பகலு மொன்றாக வெங்கு மொளியே வீறாக
நரவு முதல நானிலமே நாலுமறைக்கு மெட்டாத
கரவு கொண்ட கோவியர்கள் கண்ணாங்குரிப்பே கண்ணுதலே
வருவாய் தேவ சேண்பதியே வளரும் செம்பொன் மாமணியே.

எட்டுக்கரமு மெண்முகமு மெட்டுமனைவி மாருடனே
எட்டெழுத்து வெம்பெருமானே காந்தத்து மருமகனே
தொட்டகுறையே வந்தடுக்குந் துரியவெளியா மேல்மாயில்
விட்டசெம்பொன் மாமணியே விளங்குபரம ஜோதியனே.



அத்தகிரி யுதயகிரி யிரண்டின்காலும்
அகண்ட பரிபூரணமாம் மூன்றின் காலும்
அத்தமுடன் சித்திரையுங் காலு மேலும்
அனவரத வினாயகனாய் வந்தவாறும்

கஷ்டமுடன் சுகம் வந்துங் கலங்காய் ஞான
கருதரிய பெருமானே மேதினியின்கண்
இஷ்டமுடனவதரித்து வெங்களூரை
என்னாளுமபிவிர்த்தி யடைய செய்ய

வேண்டும் வரங்களெனக் களித்து
விமலார் சிவனார் தன் மகனே
ஆண்டும் பரம சேண்பதியிலடங்குந் தேவவினாயகனே
காண்டும் பெரிய பரம்பொருளே
கனியே எனது கண்ணொளியே
தூண்டுங்குரியே துவைதமற
தோன்றியருளே செய்திடுவாய்.

விலக்ஷணானந்த யோக வித்தகன் செப்புமிந்த
சுலக்ஷண கவிதை யொன்பான் கற்றவர் சூக்ஷமஞானம்
கலைக்ஷணம் பெற்று ஞானகாருண்யம் பெறுவாரென்று
பலக்ஷணம் போலும் வேத பாரகர் புகலுவாரே.

வாழி

வேங்கடநாதன் வாழி சேண்பதி நகரம் வாழி
தாங்குமா கருணைவாழி தன்சுயஞானம் வாழி
பாங்குறு மனிதர் வாழி பற்றிலாயோகர் வாழி
ஈங்குறுமெல்லாம் வாழி எம் வினாயகபிரான் வாழி

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

ஓம் தத் ஸத்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தினி எம்பிறை போன்ற எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

கணபதி யென்றிட கலங்கும் வல்வினை
கணபதி யென்றிட காலனுங் கைதொழும்
கணபதி யென்றிட கரும மாதலால்
கணபதி யென்றிட கவலை தீருமே.

## ஸ்ரீ செல்வ விநாயகர் போற்றல் நூற்றெட்டு

ஓம் தான்தோன்றி திருவே போற்றி
ஓம் ஓங்கார வடிவனே போற்றி
ஓம் எழுத்து கணத்தின் பதியே போற்றி
ஓம் அழியாத பரம்பொருளே போற்றி
ஓம் ஒலிவடிவான இறைவா போற்றி
ஓம் ஒளிவடிவான தலைவா போற்றி
ஓம் ஐம்பெரும் பூதம் ஆனாய் போற்றி
ஓம் நால்வகை பேறும் தருவோய் போற்றி
ஓம் நாராயணனார் மருகா போற்றி
ஓம் அண்டம் எல்லாம் ஆனாய் போற்றி
ஓம் பரிதியாய் மதியாய் நின்றாய் போற்றி
ஓம் உலகாய் உயிராய் மலர்ந்தாய் போற்றி
ஓம் இயற்கை வடிவாய் இசைந்தாய் போற்றி
ஓம் அம்பிகை மகனே ஐங்கரா போற்றி



ஓம் இந்து சேகர இறைவா போற்றி
ஓம் சசாங்க சேகரன் மகனே போற்றி
ஓம் ஆறுசெல்வ ஆண்டவா போற்றி
ஓம் அறுமுகன் உவக்கும் முதலவா போற்றி
ஓம் தேவர் போற்றும் தேவா போற்றி
ஓம் பூரணமென்றும் உவப்பாய் போற்றி
ஓம் எண்ணிய வண்ணம் அருள்வாய் போற்றி
ஓம் பிறவி மயக்கம் அறுப்பாய் போற்றி
ஓம் பிரணவப் பொருளே உரைப்பாய் போற்றி
ஓம் உளந்தனில் மிளிரும் ஒளியே போற்றி
ஓம் குரு வடிவான கோவே போற்றி
ஓம் குவலய குறையே களைவாய் போற்றி
ஓம் கொடுவினையெல்லாம் மழிப்பாய் போற்றி
ஓம் கைவல்ய ஞானம் தருவாய் போற்றி
ஓம் மூவர் மொழியின் முதல்வா போற்றி
ஓம் முழுதும் தானாய் ஆனாய் போற்றி
ஓம் மாலுக்கருளிய மாயவா போற்றி
ஓம் மனமதை ஒடிக்கி அருள்வாய் போற்றி
ஓம் அரனும் வணங்கும் ஆதியே போற்றி
ஓம் கரும்பாயிரம் கொள் களிறே போற்றி
ஓம் ஐம்புலன் காணா ஐயா போற்றி
ஓம் கருவிகள் கடந்த கற்பகா போற்றி
ஓம் குண்டலி யெழுப்புங் குருவே போற்றி
ஓம் உயர்திணை அஃறிணை கடந்தவா போற்றி
ஓம் நாயகனற்றோர் நாயகா போற்றி
ஓம் மற்றோர்க்கருளும் மாதவ போற்றி

ஓம் விலஷணமான விநாயக போற்றி
ஓம் அடியவரன்பில் திளைப்பாய் போற்றி
ஓம் ஆன்ம ஞானம் தருவாய் போற்றி
ஓம் ஆனைமுகத்து இறைவா போற்றி
ஓம் அடிமலர் சேர்த்தெமக்கருள்வாய் போற்றி
ஓம் திருநீறுவக்கும் திருவே போற்றி
ஓம் திருமகளருளே தருவாய் போற்றி
ஓம் அடியவர் இன்னல் களைவாய் போற்றி
ஓம் நால்வகை யோகமானாய் போற்றி
ஓம் நான்மறை கடந்த பொருளே போற்றி
ஓம் அறுசமயத்தின் ஆதியே போற்றி
ஓம் அன்பிற் கடங்கும் அருளே போற்றி
ஓம் அருள்தருமானந்தமானாய் போற்றி
ஓம் நலமே நல்கும் நாதா போற்றி
ஓம் கலையும் கல்வியு மருள்வாய் போற்றி
ஓம் மறையும் வேள்வியுமானாய் போற்றி
ஓம் மௌன மொழியின் இலக்கே போற்றி
ஓம் இகபரமிரண்டு மருள்வாய் போற்றி
ஓம் மூவா மருந்தே முதல்வா போற்றி
ஓம் மொழிகளின் மூலம் ஆனாய் போற்றி
ஓம் தமிழ் முனிக்கருளிய மூலா போற்றி
ஓம் அகத்தியன் ஆன ஆன்மா போற்றி
ஓம் அன்னை காவிரி தந்தாய் போற்றி
ஓம் ஈசன் மகிழும் மகனே போற்றி
ஓம் ஈசன்பால் பழம் கொண்டாய் போற்றி
ஓம் அம்மை மகிழும் பாலா போற்றி



ஓம் அறம்மறை காக்கும் தலைவா போற்றி
ஓம் நிலவின் அகந்தை நீக்கினாய் போற்றி
ஓம் நித்திய பரமயோகியே போற்றி
ஓம் நின்மலமான பொருளே போற்றி
ஓம் நிர்விகல்பமே தருவாய் போற்றி
ஓம் சங்கல்பமெல்லாமானாய் போற்றி
ஓம் சங்கரன் மகனே மங்கலா போற்றி
ஓம் இரு தாயுடைய இறைவா போற்றி
ஓம் அறதாயனுக்கு அண்ணா போற்றி
ஓம் இருவினை தன்னை எறிவாய் போற்றி
ஓம் இறுமாப்பொழித் தாள்வாய் போற்றி
ஓம் இன்பம் சேர்க்கும் உம்பா போற்றி
ஓம் உருவம் கடந்த உயர்வே போற்றி
ஓம் கற்றவர் நாடும் கனியே போற்றி
ஓம் காவியமோவி யமானாய் போற்றி
ஓம் சொல்லாய் பொருளாய் வந்தாய் போற்றி
ஓம் சந்தமும் சொல்லுமானாய் போற்றி
ஓம் கல்லிதயமும் கரைப்பாய் போற்றி
ஓம் குழந்தை வடிவ குருவே போற்றி
ஓம் தொந்தியும் தந்தியும் உடையவா போற்றி
ஓம் நந்தியின் மகனே ஞானீ போற்றி
ஓம் நந்தினீ போற்றும் நதிமகனே போற்றி
ஓம் அவுணர் கடிந்த அற்புதா போற்றி
ஓம் அறவோரை காக்கும் அருளே போற்றி
ஓம் மருளை ஒட்டும் மகேசா போற்றி
ஓம் மாதவன் தங்கை மைந்தா போற்றி

ஓம் மங்கலம் நல்கும் மறையா போற்றி
ஓம் அருகம்புல் கொள் எளியா போற்றி
ஓம் அப்பமுந் தேனும் சுவைப்பாய் போற்றி
ஓம் எப்புரமும் நீயாய் நிறைவாய் போற்றி
ஓம் எல்லா பிழையும் பொறுப்பாய் போற்றி
ஓம் முத்தமிழ் தரும் முதல்வா போற்றி
ஓம் சத்தமும் சிவமும் சேர்த்தாய் போற்றி
ஓம் சித்தமதிலே சிவமே காட்டுவாய் போற்றி
ஓம் அணுவாய் பெரிதாய் ஆனாய் போற்றி
ஓம் அட்டசித்தியும் கடந்தாய் போற்றி
ஓம் அஞ்சக்கரப் பொருள் அருள்வாய் போற்றி
ஓம் வறுமை நீக்கும் வள்ளலே போற்றி
ஓம் நலம் பலதரும் நாயக போற்றி
ஓம் சிந்தையில் நிறை செல்வகணபதி போற்றி
ஓம் சேண்பதி மேவிய செல்வனே போற்றி

சிறப்புற மறைகள் வாழி
சிறுமையிலா மாந்தர் வாழி
சிற்பர முனிவர் வாழி
சீர்லா வினம் வாழி
சிறப்புடன் யாவும் வாழி
சீர்மை யென்றும் வாழி
சிவமயம் நிலையாய் வாழி
சேண்பாக்கம் நகரம் வாழி

ஓம் தத் ஸத்



ஓம் தத் ஸத்



# சிவஷண்முக கடவுள் திருப்பதிகம்

மேல்பட்டாம்பாக்கம், கடலூர் மாவட்டம்

வள்ளி தெய்வானையுடன் கூடிய சிவசுப்பிரமணியக் கடவுள் என்ற பெயருடைய ஆலயம், கடலூர் மாவட்டம், மேல் பட்டாம்பாக்கம் என்கிற ஒரு சிறு கிராமத்தில் அமைந்திருக் கிறது. ஸ்வாமிஜி சிவஷண்முகக் கடவுள் என்ற தலைப்பு அமைத்தாலும் இந்த வள்ளி தெய்வானையுடன் கூடிய சிவசுப்பிரமணியர் ஆலயத்தையே சாரும் என்பதற்கு பல இடங்களில் பாட்டுக்களில் ஆதாரம் உள்ளது.

இது செங்குந்தர் இனத்தார் 1790ஆம் ஆண்டு நிர்மாணித்தது எனத் தெரிகிறது. (பாட்டு 10)

"மாதுவள்ளி தெய்வானை மகிழத் தோன்றும்" என்ற பாடலும்,

'தாவுக் கொச்சகக் கலிப்பா' (7) என்ற பாட்டும் கோயிலின் பெயருக்குத் தக்க பொருத்தமாய் உள்ளது.

இதில் அரனின் ஐந்து முகமும் அம்பாளின் ஒரு முகமும் என ஆறுமுகக் கடவுளை வர்ணிக்கிறார். எங்கேயோ சின்ன ஒரு கிராமத்தில் உள்ள பூக்களைக் குறித்துப் பாடிய அதிசயத்தை என்னென்பது.

இந்தப் பதிகத்தைத் தொடர்ந்து பாங்கி மாரே என்ற மெட்டில் பாட்டும் கடைசியில் நமஸ்கார திருப்புகழுடன் அழகாக முடித்திருக்கிறார்.

# ஸ்ரீ சிவஷண்முகக் கடவுள்

# திருப்பாசுரங்கள்

## சந்தக் கலிவிருத்தம்

அங்கமாறும் வேத நான்கு மரணி கண்ட நாயகம்
துங்கமா மறைப்பொருட்குத் துரியயோக நற்சுடர்
வங்க மேல்பட்டாம்பாக்க வளமிகுத்த ஷண்முகன்
சங்கநாத வேதநாத சரணபாத பத்மமே. 1

## எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

ஹடயோகம் ராஜயோகம் ஹம்ஸயோகம்
ஹம்ஸாம்ஸ கெஜமார்த்தனி பரமயோகம்
தொடர் நவகண்டம் காலாஷ்டகம் ஜிஞ்சுமார
பத்மாசன சிகரயோகம்
தொடர் வரியாப் பெரும் பொருளே மேல்பட்டாம்பாக்க
ஷண்முகனே திருவடிக்கீழ்
அடர்மனமெய் மொழி மூன்றாலாராதித்து
அனந்த ஜன்மப் பிணியகற்ற வருள் செய்வாயே. 2

உடல் கடந்து உயிர் கடந்து உணர்வுந் தாண்டி
உச்சிவெளி யதன்மேலே யேறும்போது
தொடர்வன போற்றடைக ளெலாந் தொடருமாங்கே
தூய குருவடிவாகித் தோன்றுவாய் நீ
படர்வனவே பரமேசன் குமாரனாமேல்
பட்டாம் பாக்கத் துறையு மறுமுகப்போர்
விடையறுவற்கு மாதவதற்கு விளக்குஞ்சோதி
விண்ணவனே மும்முறையு முயல்வுற்றேனே. 3



ஆதிபரஞ் சோதியிலே நின்றெழும்பி அகண்ட
பரிபூரணமாய் நின்ற தோன்றல்
நீதியிலே சுயஞ் சோதிவடிவமாகி நிர்க்குணமா
யனைவருக்குஞ் சகுணமாகிப்
பாமதியணிந்தவற்கு மிளையதே மேல்பட்டமாம்
பாக்கத் துறையும பரமதேவன்
மாதுவள்ளி தெய்வானை மகிழத் தோன்றும்
மாதவனின் மருகனாரிணைத்தாட் கென்னே. 4

அட்டாங்க யோகநிலை யனைத்துந் தாண்டி
ஆதார மாறுடனே யகிலந் தள்ளி
இட்டானு பூதிநிலை யின்ப மாற்றி
ஏகாந்த துரியநிதி இசையச் செய்து
பட்டாம்பாக்கத் துறையும் பரமன் ஆறு
படியுடைய முகத்தானை யகத்து ளானை
நிட்டானு பூதியிலே கண்டு தேறி
நிரஞ்சனமாந் திருவடியைத் தொழுது தேரே. 5

சத்தியத்துட சத்தியமாய்ச் சாதித்தானை
ஷண்முகனை வள்ளியிட மணாளன் றன்னை
முத்தியடை யடியார்க்கு முளையா னானை
மூதண்டப் பதினெண்மர் குருவா னானை
வித்துடைய மேல்பட்டாம் பாக்கத் தானை
வேதாந்த சித்தாந்த சமரசத்தை
அத்துவித துவிதமதா யாரா தித்து
அனவரத மவனடியே வணங்கு வோமே. 6

### தரவுக் கொஞ்சசுக் கலிப்பா

அரனாரினைந்து முகமம்பாளி னொருமுகமுந்
திரமான வாறுமுக மாகிவருந் தேடரிய
வரமான மேல்பட்டாம்பாக்க மதிலே யுறையும்
குருவாகுஞ் சண்முகனைக் குருவாக்கி யேத்துதுமே. 7

நீதிபதி யாதிபதி நித்தய மாஞ்சோதிபதி
போதபதி புண்யபதி பூரணமாம் பூமிபதி
ஆதிபதி ஆறுமுக அகண்டபதி யத்வைத
மேதைபதி பட்டாம்பாக்கத் துறையும் பதியாரே. 8

### எண்சீர் விருத்தம்

திருமுகமுந் திருமார்புந் தெய்வ நோக்குந்
திரண்டெழுந்த பனிரெண்டு புயமுந் தோன்ற
வருமுகமும் அடியவர்தம் மபய வாழ்வும்
ஆறி ரண்டு கண்களுடன் பட்டாம்பாக்கம்
வருமுதலே ஷண்முகனே வள்ளி தெய்வ
வானவியோ டினிதிலிங்கி யடியே னுள்ளத்
தருவிடையே யிலங்குமுன திருப்பாதத்தைத்
தாங்கி நிற்பதென் னாளோ தமியனேனே. 9

தேகமு தனானென்ற துவைதந் தள்ளித்
தித்திரியின் வேதமதி லுணர்த்து மாறு
ஆக முதிந்திரிய மனைத்துந் தாண்டி
அத்துவித துவதநிலை யனைத்துங் கண்டு
மாது மகிழ்மேல் பட்டாம்பாக்க நேய
மாதவனின் றிருமருகன் ஷண்முகன்றாள்
வேதமுதற் செங்குந்த மரபார் செய்த
சிவசிவ வென்றுள்ளமதி லுதித்த வாறே. 10



வேல்கொண்ட வாறுமுக விண்ணவன் தெய்யமே
விளக்கமாய் வந்த முருகா
மேல்பட்டாம்பாக்க நகர் வேதிய வடிவமாய்
விதியாக வந்த முருகா
போத நடுவூடிலே புண்ணிய சொரூபமாய
பூத்தமுதமான முருகா
காதிகதை போலவே நாடரிய நாதமாய்க்
கண்கண்ட ஞானமுருகா
புவனமிசை யாறுநால் இருப்பத்திநாலுடன்
பூரணங் கொண்ட முருகா
பூதலம் பாதலம் வேதமுங் காணாத
புவராஜ யோக முருகா. 11

### வாழி

### தாவுக் கொச்சக கலிப்பா

வேங்கடவன் றிருமருகன் வேதவள்ளி தெய்வானை
சாங்கிய மாமுனி குமரன் சத்துவமாம் பதிணெண்ணாபேர்
தூங்குமுனி பலர்வாழி தூயபட்டாம்பாக்க நகர்
வாங்கிய வேல் ஷண்முகனார் வாழியது வாழியவே. 12

"பாங்கிமாரே' என்ற மெட்டு

ஆதிபரஞ் ஜோதியடி பாங்கிமாரே
அவன்
ஆறுமுக நாதனடி பாங்கிமாரே
அவன்
தேவர் சேனாதிபதி பாங்கிமாரே
அவன்
தித்திரியினுண்மையடி பாங்கிமாரே
அவன்
மந்தார வேளையிலே பாங்கிமாரே
அவன்
மயிலேறி வருவாண்டி பாங்கிமாரே
அவன்
வள்ளி மணவாளரடி பாங்கிமாரே
அவன்
மாதவற்கு மருமகன்டி பாங்கிமாரே
அவன்
திவ்ய அலங்காரனடி பாங்கிமாரே
அவன்
தெகிட்டாத லோலனடி பாங்கிமாரே
அவன்
பட்டாம்பாக்கத் துறையும் பாங்கிமாரே
அவன்
பார்வதி குமாரனடி பாங்கிமாரே
அவன்
வெட்டவெளிதாண் டுவண்டி பாங்கிமாரே



அவன்
வேதாந்த ஜோதியடி பாங்கிமாரே
அவன்
ஆறைந்து மானவண்டி பாங்கிமாரே
அவன்
அகண்ட பரிபூரணண்டி பாங்கிமாரே
அவன்
சூதற்ற பரவெளியில் பாங்கிமாரே
அவன்
சுகலீலை செய்கின்றான் பாங்கிமாரே
அவன்
துறவுநிலை பூண்டாடி பாங்கிமாரே
அவன்
சிவங்கரனை பெண்ணுவண்டி பாங்கிமாரே
அவன்
துரிய வடிவான வண்டி பாங்கிமாரே
அவன்
தூய வடியாருறவன் பாங்கிமாரே
அவன்
பாக நகரெம் பெருமான் பாங்கிமாரே
அவன்
பால முரகேசனடி பாங்கிமாரே
அவன்
பரமாத்ம மாமுனிவன் பாங்கிமாரே
அவன்
பகர்ந்தவிந்த பாங்கியது பாங்கிமாரே

# நமஸ்காரத் திருப்புகழ்

தன தன தான தன தான தன தன தான தன தான
(தனதான)
தன தன தான தன தா

பரமசிவ பாலா நமோ நம
திருவுருஞானா நமோ நம
கிரிமனவாசா நமோ நம
கிதிஜோதி

சிவைதரு சீலா நமோ நம
தவமுள யோகா நமோ நம
குவியணை தீரா நமோ நம
குக ராஜா

பரம சொரூபா நமோ நம
பகவதி பாலா நமோ நம
இமையவரீசா நமோ நம
இசைவேலா

குகசிவபோதா நமோ நம
குருமுனி கோவே நமோ நம
சிவ சிவ கோலா நமோ நம
சிவ ரூபா

மரகத தேகா நமோ நம
சததளபாதா நமோ நம
விகசித தேவா நமோ நம
விபுதேசா

ஈரபதி வேலா நமோ நம
சுயவறி ஞானா நமோ நம
சரணவிகாதா நமோ நம
சருவேசா



அரனிட யோகா நமோ நம
நிறைமதிவானா நமோ நம
முருகபதாதா நமோ நம
முடிராஜா

இருடிய போதா நமோ நம
அரிமருகாளா நமோ நம
சரவணதேவா நமோ நம
பெருமாளே

ஏழுமலை வேங்கடவனாறு முகனம்ச நிறை
பாழுடைய பெருமானார் பரம்பரையினின் றெழும்பி
வாழுவில க்ஷணானந்த வானவனார் பாடலிதைத்
தாழுறவே பாடவல்லார் தயாபரமே யாகுவரே.

ஓத் தத் ஸத்

**– ஸ்ரீ விலாணானந்த பரமாத்மா ஸ்வாமிகள்**

ஓத் தத் ஸத்



## ஸ்ரீ மஹாலிங்கேஸ்வரர்

திருவிடைமருதூர், தஞ்சாவூர் மாவட்டம்

ஸ்ரீ மஹாலிங்கேஸ்வரர் கோயில் ஒரு இந்து ஆலயம். ஏழு சிவாலயங்களில் ஒன்றாகும். இது 9ஆம் நூற்றாண்டு விக்கிரம சோழனால் கட்டப்பட்டதாகும். தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் ஓர் கிராமமாகும்.

இது பஞ்ச சிரேச ஸ்தலத்தில் ஒன்று. லிங்கம் ஸ்வயம்பூ. ஜோதிர்மய லிங்கம். அம்பாள் பிரஹத்சந்தர சரசாம்பாள். 51 சக்தி பீடங்களில் ஒன்று. இங்கு முதலில் சிவனுக்கு பூஜை செய்த பிறகுதான் விநாயகருக்கு பூஜை நடைபெறுகிறது. கோயில் பிரம்மாண்டமான பிரகாரங்களுடன் கூடியது. நாலு பக்கமும் பிரகாரங்கள் உண்டு. ஆறுகால பூஜை நடைபெறகிறது.

தீர்த்தம் காருண்யாமிர்தம். ஸ்தல விருக்ஷம் மருத மரம்.

இம்மஹாலிங்கேஸ்வரர் மஹிமைகளை ஸ்வாமிகள் பாங்கி மாரே என்ற மெட்டில் பாடியுள்ளார். அப்பர் முதல் நாலு சைவாசார்யர்களும் அதனுடன் பட்டினத்தார் முதலிய அறியோர்களால் பாடல்கள் பெற்ற ஸ்தலம்.



பல அரசர்களின் பங்கு இதில் உண்டு. குறிப்பாக 149 கல்வெட்டுக்கள் சோழ, பாண்டியர், மராட்டியர், நாயக்கர் பற்றி பல அறிய தகவல்களைத் தெரிவிக்கிறது. மூன்றாம் கோபுரம் விஜயநகர் சிற்பங்களை கொண்டது. வரகுண பாண்யடினுக்கு பிரம்மஹத்தி தோஷம் நீங்கிய இடம். இந்த சிவலிங்கத்தை சிவபெருமானே பிரார்த்தித்ததாக சொல்லப்படுகிறது.

## ஸ்ரீ மஹாலிங்கேஸ்வரர் பாங்கீ கானம்

ஓம் பெரிய உண்மையடி — பாங்கிமாரே – அவன்
உத்திரதிசையனடி — பாங்கிமாரே

சாம்பசிவ சம்புவடி — பாங்கிமாரே – அவன்
சங்கர சொரூபனடி — பாங்கிமாரே

ஜோதிமடி நாதனடி — பாங்கிமாரே – அவன்
சுகதேவர் போதனடி — பாங்கிமாரே

மாதினொரு பாகனடி — பாங்கிமாரே – அவன்
மங்கள விலாஸனடி — பாங்கிமாரே

மத்தியிலே நின்றவண்டி — பாங்கிமாரே – அவன்
மருதூர் வாழ்யோகனடி — பாங்கிமாரே

சத்தி நிலைகொண்டவண்டி — பாங்கிமாரே – அவன்
சாதனைகளற்றவண்டி — பாங்கிமாரே

மஹாதேவ தேவனடி — பாங்கிமாரே – அவன்
மாளாத யோகியடி — பாங்கிமாரே

யுக நலலு மானவண்டி — பாங்கிமாரே – அவன்
யுக்தி நிலைக்கனட்டாண்டி — பாங்கிமாரே

இடைமருதூர் வாழ்வனடி பாங்கிமாரே – அவன்
எம் பெருமான் உம்பர்பிரான் பாங்கிமாரே

விடையேறுங் காபாலி பாங்கிமாரே – அவன்
விண்ணவர் சகாயனடி பாங்கிமாரே

ஜனகாதி ஆசிரியன் பாங்கிமாரே – அவன்
சத்திய தவத்தனடி பாங்கிமாரே

மனமாதி யில்லாண்டி பாங்கிமாரே – அவன்
மகமுனிவர் தெய்வமடி பாங்கிமாரே

பற்றை தொலைத்தவண்டி பாங்கிமாரே – அவன்
பற்று நிலைற்றவண்டி பாங்கிமாரே

கற்றை சடையனடி பாங்கிமாரே – அவன்
காம்பீர பாகனடி பாங்கிமாரே

கைலைமலை வாசனடி பாங்கிமாரே – அவன்
காரண சொருபனடி பாங்கிமாரே

சைலவுரு வானவண்டி பாங்கிமாரே – அவன்
சகவாஸ முக்தியடி பாங்கிமாரே

பேரால் பெரியவண்டி பாங்கிமாரே – அவன்
பேசாத பேச்சனடி பாங்கிமாரே

ஊரோக் கிடைப்பதிலலை பாங்கிமாரே – அவன்
உள்ளூருக்காரனடி பாங்கிமாரே



கௌரி மணவாளனடி பாங்கிமாரே – அவன்
கீர்த்தியென்ன சொல்வேனடி பாங்கிமாரே

சௌர நிலை மானனடி பாங்கிமாரே – அவன்
சாகசத்தை கண்டறியேன் பாங்கிமாரே

ஞானமுரை செய்தவண்டி பாங்கிமாரே – அவன்
நாலுமுகமானவற்கு பாங்கிமாரே

ஆனபரபிரப்பிரஹ்மமடி பாங்கிமாரே – அவன்
அம்பாள் மணாளனடி பாங்கிமாரே

தேவதைகள் தேவனடி பாங்கிமாரே – அவன்
தெய்வ பரிபாலனடி பாங்கிமாரே

காவலியா கண்ணுதலான் பாங்கிமாரே – அவன்
காரணமில்லா வத்தனடி பாங்கிமாரே

சம்போ மஹாதேவனடி பாங்கிமாரே – அவன்
சாசுவதமானவண்டி பாங்கிமாரே

உம்பர் மனவாசனடி பாங்கிமாரே – அவன்
ஊரறியா யோகனடி பாங்கிமாரே

பாவமெல்லாம் பறந்தோடும் பாங்கிமாரே – அவன்
பார்வையிலே பார்த்தேண்டி பாங்கிமாரே

சாவதிலை யாவர்களும் பாங்கிமாரே – அவன்
சன்னிதியில் சென்றவர்கள் பாங்கிமாரே

மோகாதியற்றவண்டி பாங்கிமாரே – அவன்
மோனம் கடந்தவண்டி பாங்கிமாரே

ஆகாத மின்றியவன் பாங்கிமாரே – அவன்
அச்சுத வடியனடி பாங்கிமாரே

எல்லாம் விளங்குமடி பாங்கிமாரே – அவன்
இச்சையுற நின்றவற்குப் பாங்கிமாரே

நல்லார் மயக்கமிலான் பாங்கிமாரே – அவன்
நாட்டமெல்லாந் தன்னிடத்தே பாங்கிமாரே

சாம்பவி மடந்தையற்குப் பாங்கிமாரே – அவன்
சகசமய மானவண்டி பாங்கிமாரே

சாம்பவியுங் கேசரியும் பாங்கிமாரே – அவன்
சாராமல் நின்றவண்டி பாங்கிமாரே

ஈசனுக்கு மீசனடி பாங்கிமாரே – அவன்
எம் பெருமான் தெய்வமடி பாங்கிமாரே

மாசற்ற ஜோதியடி பாங்கிமாரே – உடல்
மாற்றில்லாத தங்கமடி பாங்கிமாரே

துரியங் கடந்தவற்கும் பாங்கிமாரே – அவன்
தோன்றாமல் நின்றவண்டி பாங்கிமாரே

கரிய திருமாலவற்குப் பாங்கிமாரே – அவன்
கருத்துடைய மைத்துனண்டி பாங்கிமாரே



பவள நிறமேனியடி பாங்கிமாரே – அவன்
பக்க மெல்லாம் வீசுதடி பாங்கிமாரே

உமையிலா வுத்தமண்டி பாங்கிமாரே – அவன்
ஒருவனுள முலகமடி பாங்கிமாரே

ஆருமிலா வேளையிலே பாங்கிமாரே – அவன்
அந்தணர்வனம் புகுந்தான் பாங்கிமாரே

தாருகா வனத்து மாதர் பாங்கிமாரே – இவன்
றன்னையுற்று மதியிழந்தார் பாங்கிமாரே

கொங்கை தெரியவைத்தான் பாங்கிமாரே – அவன்
கூத்தாட வைத்துவிட்டான் பாங்கிமாரே

செங்கை தொடவும் வைத்தான் பாங்கிமாரே – அவன்
சேலை பிடித்திழுத்தான் பாங்கிமாரே

எள்ளிலெண்ணை போலிருப்பான் பாங்கிமாரே – அவன்
ஏகாந்த போகனடி பாங்கிமாரே

வள்ளி மணவாளனுக்கு பாங்கிமாரே – அவன்
வழியடியாய் வந்தவண்டி பாங்கிமாரே

நாட்டியத்தில் பிரியனடி பாங்கிமாரே – அவன்
நடமாடிக் காண்பித்தான் பாங்கிமாரே

பாட்டினிலும் வல்லவண்டி பாங்கிமாரே – அவன்
பாடாத பாட்டில்லை பாங்கிமாரே

| | |
|---|---|
| ஆகாச போதனடி | பாங்கிமாரே – அவன் |
| அந்தி நிறத்தனடி | பாங்கிமாரே |
| பாகார் மொழியனடி | பாங்கிமாரே – அவன் |
| பரமசிவ நாமனடி | பாங்கிமாரே |
| கந்தனுக்கு தந்தையடி | பாங்கிமாரே – அவன் |
| காதை பெருங்காதையடி | பாங்கிமாரே |
| பந்தமிலா பத்தர்கட்கு | பாங்கிமாரே – அவன் |
| பற்றோடு தோன்றகின்றான் | பாங்கிமாரே |
| புலியுடை யுடுத்தவண்டி | பாங்கிமாரே – அவன் |
| புத்தமுத மீந்தவண்டி | பாங்கிமாரே |
| கலி நடன ராஜனடி | பாங்கிமாரே – அவன் |
| கங்குல் பகலில்லாண்டி | பாங்கிமாரே |
| ஆனையுரி போர்த்தவண்டி | பாங்கிமாரே – அவன் |
| அதனுள்ளு நின்றாண்டி | பாங்கிமாரே |
| மானையொரு கையேந்தும் | பாங்கிமாரே – அவன் |
| மழுவேந்து மெனையேந்தும் | பாங்கிமாரே |
| பஞ்சவர்க்கும் விஞ்சியவன் | பாங்கிமாரே – அவன் |
| பக்ஷமற நின்றவண்டி | பாங்கிமாரே |
| தஞ்சமுறுந் தாதனடி | பாங்கிமாரே – அவன் |
| தானாக நின்றவண்டி | பாங்கிமாரே |



| | |
|---|---|
| வேலளித்தான் செண்டளித்தான் | பாங்கிமாரே – கூடல் |
| விளங்க வந்தகுமரனுக்கு | பாங்கிமாரே |
| காலளித்தான் கதியளித்தான் | பாங்கிமாரே – அவன் |
| கருங்குருவி நாரைக்கும் | பாங்கிமாரே |
| சுந்தரற்குத்தூது சென்றான | பாங்கிமாரே – அவன் |
| சொற்கடவாத் தூயனடி | பாங்கிமாரே |
| அந்தரத்தி லூரமைத்தான் | பாங்கிமாரே – அவன் |
| அதனுள்ளே தானமைந்தான் | பாங்கிமாரே |
| மாயா ரகிதனடி | பாங்கிமாரே – அந்த |
| மட்டறுத்து நின்றவண்டி | பாங்கிமாரே |
| தோயா வருளுடையான் | பாங்கிமாரே – அவன் |
| தொய்த மறுத்தவண்டி | பாங்கிமாரே |
| அக்ஷரமுமத்த விதம் | பாங்கிமாரே – இந்த |
| ஆன்மாவு நாமென்றான் | பாங்கிமாரே |
| பிக்ஷை கொண்டான் பிழைகடிந்தான் | பாங்கிமாரே – நாம் |
| பிழைப்பதற்கு செய்தாண்டி | பாங்கிமாரே |
| கால்மாற்றி யாடுவண்டி | பாங்கிமாரே – அவன் |
| ககன வடிவானவண்டி | பாங்கிமாரே |
| வேல்மாற்று மையனடி | பாங்கிமாரே – அவன் |
| விட்டவிடந் தொட்டவண்டி | பாங்கிமாரே |

நினைப்பொழிந்தாலுக மில்லை பாங்கிமாரே – அவன்
நினைத்து விட்டாலுலகமடி பாங்கிமாரே

அனைத்துலகு மானாண்டி பாங்கிமாரே – அவன்
ஆதிபரஞ்சோதியடி பாங்கிமாரே

அந்தணர்கு மந்தணண்டி பாங்கிமாரே – அவன்
அம்புலி யணிந்தவண்டி பாங்கிமாரே

சிந்தை குடிகொண்டவண்டி பாங்கிமாரே – உடல்
சிதம்பரத்து வுண்மையடி பாங்கிமாரே

மதபேதமில்லாண்டி பாங்கிமாரே – அவன்
மதமொழித்து வாவென்றான் பாங்கிமாரே

சதரூப நாமனடி பாங்கிமாரே – அவன்
சாவதிலை வாழ்வதிலை பாங்கிமாரே

மஹாலிங்க தெய்வமடி பாங்கிமாரே – அவன்
மன்றுனடமாடுவண்டி பாங்கிமாரே

அகமாதி போக்குவண்டி பாங்கிமாரே – அவன்
அசல பரயோகனடி பாங்கிமாரே

ஒரு நிலைப்பிலுலகமெலாம் பாங்கிமாரே – இங்கு
உண்டாகு மழியுமடி பாங்கிமாரே

இருநினைப்பு மில்லாண்டி பாங்கிமாரே – அவன்
இந்திரனுக் கருள்செய்தான் பாங்கிமாரே



தாமரைக் கண்ணீசனுக்கும் பாங்கிமாரே – அவன்
தத்துவ முறைத்தவண்டி பாங்கிமாரே

காமதுரை ராஜனரை பாங்கிமாரே – அவன்
கண்ணா லெரித்தவண்டி பாங்கிமாரே

சிவன் தெய்வம் தெய்வமடி பாங்கிமாரே – மறை
செப்புகின்ற வுண்மையடி பாங்கிமாரே

இவன் தெய்வம் அவன் தெய்வம் பாங்கிமாரே – என்று
எண்ண மிலாதலைகின்றார் பாங்கிமாரே

மூகாம்பி மோகனடி பாங்கிமாரே – அவன்
முற்றுந் துறந்தவண்டி பாங்கிமாரே

தேகாதி யில்லவண்டி பாங்கிமாரே – அவன்
தேசந் துரியமடி பாங்கிமாரே

கைபிடித்தான் வளையலிட்டான் பாங்கிமாரே – அவன்
கண் பார்த்தான் கைலையடி பாங்கிமாரே

உய்வகையே சொல்லுகின்றான் பாங்கிமாரே – அவன்
உண்மையினை கண்டவற்கு பாங்கிமாரே

அருளுருவம் சிவனுருவம் பாங்கிமாரே – அவன்
அவ்வுருவு மில்லையடி பாங்கிமாரே

இருளுருவு மொளியுருவும் பாங்கிமாரே – அவன்
இசையுரு வுமானவண்டி பாங்கிமாரே

கையிலொரு காசுமிலான் பாங்கிமாரே – அவன்
காசினுக்கு மூலனடி பாங்கிமாரே

பையர வணிந்தவண்டி பாங்கிமாரே – அவன்
பாதம் பாதாளமடி பாங்கிமாரே

பருதி மதி காலியவன் பாங்கிமாரே – அவன்
பருமஹ சூடாமணியன் பாங்கிமாரே

புரிதுரிய வாசமடி பாங்கிமாரே – அவன்
புவி சகஸ பூமனடி பாங்கிமாரே

மூத்தேவர் போற்றுகின்றார் பாங்கிமாரே – அவன்
மோனமுக்தி நாதனடி பாங்கிமாரே

பர்த்தவே தெய்வமென்றான் பாங்கிமாரே – அந்த
பதிவிரதைக் கடிமையென்றான் பாங்கிமாரே

ஏறிடப மேறுவண்டி பாங்கிமாரே – அவன்
ஏரலகு் சொன்னவண்டி பாங்கிமாரே

கூறிட மிலாதவண்டி பாங்கிமாரே – அவன்
குற்றால நாயகண்டி பாங்கிமாரே

கண்திறந்தான் எரித்துவிட்டான் பாங்கிமாரே – அவன்
காமனையும் மாமனையும் பாங்கிமாரே

உண்முகத்தானுள் வடிவன் பாங்கிமாரே – அவன்
உறங்குகின்றான் றன்னிடத்தே பாங்கிமாரே



சிகலமலை வாசனடி பாங்கிமாரே – அவன்
சீவன்வனென் சிந்தையுளன் பாங்கிமாரே

அகரமய மானவண்டி பாங்கிமாரே – அவன்
அபயநம மோனடி பாங்கிமாரே

கங்கையணி கடவுளடி பாங்கிமாரே – அவன்
காரியம் பெரியதடி பாங்கிமாரே

எங்குநிறை யீசனடி பாங்கிமாரே – அவர்க்கு
ஈடொருவர் இல்லையடி பாங்கிமாரே

காசி விசுவேசனடி பாங்கிமாரே – அவன்
கருணையொன்றே போதுமடி பாங்கிமாரே

தூசியொன்று பட்டதடி பாங்கிமாரே – அவன்
துய்யபதஞ் சேர்த்ததடி பாங்கிமாரே

பாண்டியனா யாண்டானடி பாங்கிமாரே – அவன்
பரதகண்டம் புவியனைத்தும் பாங்கிமாரே

ஆண்டி நிலையாகி நின்றான் பாங்கிமாரே – அவன்
அதிகார தெய்வமடி பாங்கிமாரே

அங்கையற் கணம்பிகைக்கும் பாங்கிமாரே – அவன்
அருங் கணவனானவண்டி பாங்கிமாரே

பொங்கு கடற்புவியனைத்தும் பாங்கிமாரே – கணப்
பொழுதி லொன்று செய்திட்டான் பாங்கிமாரே

நந்தீசன் வாழ்வளித்தான் பாங்கிமாரே – அவன்
நமனாரை நடுங்கவைத்தான் பாங்கிமாரே

மந்தார வேளையிலே பாங்கிமாரே – அவன்
மயிலோடு லாவுகின்றான் பாங்கிமாரே

வந்தவந்த சுந்தரிக்கு பாங்கிமாரே – அவன்
வளையணிந்தான் கைபிடித்தான் பாங்கிமாரே

சொந்தவுடல் துகில்மறந்தார் பாங்கிமாரே – இவன்
தொட்டவுடன் தனைமறந்தார் பாங்கிமாரே

சிங்கமுக ஆதனத்தன் பாங்கிமாரே – அவன்
சிரிக்கின்றா னெரிக்கின்றான் பாங்கிமாரே

எங்கள்குல தெய்வமடி பாங்கிமாரே – அவன்
ஈசான பாகனடி பாங்கிமாரே

பேர்பெரிய யோகியடி பாங்கிமாரே – அவன்
பேதமில்லாச் சம்புவடி பாங்கிமாரே

கார்நிறத்து கண்ணழகன் பாங்கிமாரே – அவன்
கத்திமுதற் கண்டானடி பாங்கிமாரே

தக்ஷிணாமூர்த்தியடி பாங்கிமாரே – அவன்
தானே தானானவண்டி பாங்கிமாரே

தக்ஷன் மருகனடி பாங்கிமாரே – அவன்
தாக்ஷயாணி பிரியன் பாங்கிமாரே



வைஜயந்தி மலையடைந்தான் பாங்கிமாரே – அவன்
வனவாசச் சித்தனடி பாங்கிமாரே

பொய்யுமுகில் போருள்வான் பாங்கிமாரே – அவன்
பித்தனென வோடுகின்றான் பாங்கிமாரே

அடியார்க் கடியனடி பாங்கிமாரே – அவன்
அடியார் தலைவனடி பாங்கிமாரே

கடிமணத்துக் கோலனடி பாங்கிமாரே – அவன்
கனவினிலே வந்தாண்டி பாங்கிமாரே

ஆடையிலா வத்வைதன் பாங்கிமாரே – அவன்
அதுவுமிலா வந்தரத்தன் பாங்கிமாரே

வீடளிப்பான் விதியழிப்பான் பாங்கிமாரே – அவன்
விளங்கு பரமார்த்தனடி பாங்கிமாரே

ஆகம புனிதனடி பாங்கிமாரே – அவன்
அக்ஷர சொரூபனடி பாங்கிமாரே

ஏகமய மானவண்டி பாங்கிமாரே – அவன்
இருசமய லோலனடி பாங்கிமாரே

ஆதியனாதியடி பாங்கிமாரே – அவன்
ஆனந்த ரூபனடி பாங்கிமாரே

ஓதுமறை நாதனடி பாங்கிமாரே – அவன்
உறுதியுள்ள ஞானியடி பாங்கிமாரே

வாழிசிவன் வாழியரன் பாங்கிமாரே – இந்த
வாளரவும் வாழியடி பாங்கிமாரே

வாழிபரன் வாழியுமை பாங்கிமாரே – அவன்
வாகனமும் கைலையுடன் பாங்கிமாரே

ஓம் தத் ஸத்



ஓம் தத் ஸத்



திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் பஞ்சரத்தினம். இந்த ஐந்து பாடல்களில் தினமும் 2 கழுகுகள் வரும் விவரத்தையும் *12* வருடங்களுக்கு ஒருமுறை நீர் ஆழியில் சங்கு ஒன்று வருவதையும் குறிப்பிடப்படுகிறது. கடைசியாக 1-9-2011இல் பார்த்ததாகக் கூறப்படுகிறது.

## ஸ்ரீ வேதகிரீஸ்வரர் பஞ்ச ரத்தினம்

பொன்பூத்துப் பொலியுமிள மதியும்பூத்துப்
புனல்பூத்துக் கனல்பூத்துக் கொன்றைபூத்துத்
தென்பூத்த சடாமுடியும் பவள சோதித்
திருமேனி யணிநீறுந் தெரியக்காட்டி
மன்பூத்த வொருபாகங் கலந்த தெய்வ
மரகதமா மயிலுடனே மருவிமங்குன்
மின்பூத்த திருக்கழுக்குன்றதனின் மேவும்
வேதகிரியீச வினைவிலக்கு வாயே. 1

காதார்ந்த நெடுங்கயற்கட் பவளச் செவ்வாய்க்
கவுரிமயிலொரு பாகங் கலந்தமேனித்
தாதார்ந்த பொன்னிதழி மதியம் பூத்த
சடைமுடியா மிமையவருந் தவஞ்செய்வோரும்

வேதாவுங் குறையிரந்து நாளும் போற்றும்
வேதகிரியீச சருவேச விண்ணோர்க்
காதாரமான கழுக்குன்ற மேவு
மமலா வென்மீதருள் வைத்தாளுவாயே. 2

வேலைவா யெழுந்துலக மெல்லாந் தீய்க்கும்
விடமருந்திச் சராசரங்கள் வீய்ந்திடாமல்
காவைவா யருக்கனெனத் தோன்றியன்னாள்
களங்கரந்து முப்புரநீ றாகக்காய்ந்து
சோலைவாய் விண்ணவர்தந் துயரந்தீர்த்த
சுந்தரனே வேதகிரீயீசா கொன்றை
மாலைவாய் மணிச்சுடரே வறுமை நோய்க்கு
மருந்தனையாய் கழுக்குன்ற வாசத்தானே. 3

விண்ணுலவுஞ் சடைமுடியாய் விடையிலேறும்
வேதகிரியீசா வெண்டிரை நீர் வேலி
மண்ணுலகிற் கழுகிரண்டு வலமாய்வந்துன்
மலரடியைச் சேவை செய்யும் வழக்கமாந்தர்க்
கண்ணிரண்டு கொடுகாணத் தினமுமாறாக்
காக்ஷிதருங் கழுக்குன்றக் கதிரே நாயேன்
பன்னிரண்டு வினைதீர்த்து னடியனாக்கிப்
பரிபவங்கள் வாராது பாலிப்பாயே. 4

தேனமருவும் பொழிலருவிச் சிகரம் விண்டோய்
திருக்கழுக்குன்றத் துறையுமொரு தெய்வமே – பொன்
மான் மழுவுங் கரத்தேந்திப் பொலிந்த சோதி
மணிச்சுடரே கருணைபொழி மழையே வெள்ளை
யான்மருவு மானந்தா காரமான
வருமறையின முடியிலுறை யமுதே நாயேன்
பான்மருவி வேதகிரியீசா வென்றும்
பாராமுகமா யிருக்காது பாலிப்பாயே. 5

ஓம் தத் ஸத்



ஓம் தத் ஸத்



## காமாட்சி அம்மன் திருப்பதிகம்

அப்பணநல்லூர்

பழமையான இந்து கோயில். திருச்சி மாவட்டம். அன்னை பத்மாஸனத்தில் அமர்ந்துள்ளார். கீழ் கையில் கரும்பு வில் பூங்கொத்து, மேற்கையில் பாசாங்குசம், அமைதியையும் சுபீட்சத்தையும் அளிப்பவள். அன்னை திரிபுரசுந்தரியின் பிரதிபலிப்பு. கோபுரம் தங்கத் தகடால் வேயப்பட்டுள்ளது. ஸ்வாமியின் 11 பாடல்களால் ஜ்வலிக்கிறது.

கமாந்த காரமுடன் கற்பகத்தைக் காணாமற்
கதிநிலையுங் கவியுங் கெட்டு
நாமாரென் றெண்ணாமல் நற்பதவி நாடாமல்
நன்மையெலா நலிந்து நாளு
மாமாக நின்றலைத்தோ மப்பண நல்லூரருகே
யன்பாகவ மர்ந்த தேவே
காமாக்ஷி யம்மையெனு நாம மதுபூண்ட
காரணியே கமலத் தேவே. 1

வேறு

ஆறாறுங் காணாத வம்மாளே வடியேனைத்
தாராயோ தனிநிலைமை தந்தென்னை யாளாயோ
வேறாக நிற்பேனோ வேதாந்தவுள் வெளியி
னீரான நிருமலியே நிற்கின்றேனி மலியளே. 2

வேறு

அப்பமாகியவன்பிலுறைமக
னப்பணநலூரருகுறுமான்மத
கப்பமானதுங்காக்ஷியருகுறச்
செப்புவாரதுதேவியென்செல்வியே. 3

காமமற்ற கதிநிலைக் காரணர்
வாம தேவரடியிணை வந்திட
நாம முற்றநலமுற நாடொறு
மூமையம்மை யுறவுற வுள்ளுவாம் 4

எட்டுமெட்டுமியலறியொன்பது
மெட்டுமெட்டறவேகமுமுன்னியே
யொட்டுமற்றவுயர்நிலையூடுற
விட்டுவிட்டுவியப்பதுவீதமே. 5

வேறு

மானதபூசையாலே மனமறுத்தப்பாலேகி
வானமுமைந்துநீத்து வழிதெரிந்தாற்றுகின்ற
வேனவெம்பெருமான் றங்கையிறை மலரடி யிற்றாழ்ந்து
பானமாங்காமாக்ஷிப்பேரப் பராபரிபதமும் போற்றே. 6

ஒள்ளியமனத்தோர் தங்க ளுள்ளிலே யுவகைபூத்துத்
தெள்ளிய பரமானந்த வுச்சியிற்றி கழந்துதோன்றி
யள்ளிய வதனினின்று மறிவுறவ தனாலம்மை
யொள்ளருங் காமாக்ஷிப் பேரொரு விடவுன்னு வோமே. 7



ஆதிநாளருகிருந்து மரனறிவுறமிக்கப்
பாதிநாளுன்னைத்தேடிப் பதிநிலையறியாமற்றான்
வேதியர் முனவர்யோகர் விளம்பியமால் சித்தாந்தர்
தோதகரெல்லாந் தேடித் துணிகின்றேன ம்மையாரே. 8

காமமாதி நாலாறுங் கண்டவர் காணா நின்னைப்
பாமர மனதினாலே பதிநிலை காணலாமோ
வாமது மறிவுறாத வகம்புற நிறைந்த வுன்னை
நாமெலா மறியலாமோ நற்குண வம்மையாரே. 9

உள்ளிலேமுளைத் தெழுந்து மூடுறுமறிவினாலே
யெள்ளருமனதையெண்ணி யெங்குமாய் நிற்பதற்கு
வெள்ளைவேணியன்றன்மேனி விளம்பிய காமாக்ஷிப்பேர்
நள்ளிருள் வந்தகாலை நாணுற நிற்பனன்றே. 10

வேறு

எட்டாமணியை யிறைமணியை
யெங்குந் தானாமென் மணியை
யட்டாங்கத் தினறிமணியை
யறிவாலுணருமருக மணியை
முட்டாங்கத்தான் முனிமணியை
மூடாதந்த முறைமணியைப்
பட்டாநிற்கும்பதி மணியைப்
பதங்காமாக்ஷி மணியாமே. 11

சொல்லாலறியாக்காமாக்ஷி சுகத்தாலறியாக் காமாக்ஷி
நில்லாவுகநிசமென்றே நின்றாலுனக்கு நினைப்பாமோ
வல்லாவுலகமது நிசமோ வந்தமான்வாராமுதே
வெல்லா நிற்குங்காமாக்ஷி வெட்டவெளியை வேண்டுவமே.
12

ஆறுங்காணாக் காமாக்ஷி யன்பாலுணருங் காமாக்ஷி
வேறுங் கூறாணாவேண்டாத விமலரறியுங் காமாக்ஷி
நாறுமுடிடலை நிசமென்றே நம்பிநம்பி நாமலைந்து
பாறும்பாடு பாரீரோ பத்தியவளைப் பார்ப்பீரே. 13

வெட்டவெளிக்கு மேலாக வேதாந்தத்தினுள்ளாகப்
பட்டமரமுந்தான் முளைக்கு பரமானந்தவுச்சியிலே
நட்டவிதையு நன்றாக நாங்களெல்லா நலமடைய
விட்டகுறையாங் காமாக்ஷி விமலபாதம் வேண்டுவமே. 14

ஆராதாரந்தாண்டி வந்து மப்பாலுணருங் காமாக்ஷி
நீராநிலனு நிமலமுற நின்றேனின் துபதவடியைத்
தாராயெனக்குத் தனிநிலைமை தந்தாலுடனே தாண்டிடுவே
னாராயணனின்றங்கையளே நன்றாயடியேற் கருள்வாயே. 15

வேறு

வாயினாலறியவொண்ணா வழக்கமே கொண்டு நின்று
சேயதாயுணருமென்னைச் சிதம்பரத்துச்சிமீது
வேயினாலூதுங்கண்ணன் வியப்புறவமைந்ததாயே
தாயினுமருமைமிக்கத் தனிநிலை நீயாமன்றே. 16

வேறு

வேதமுதலாகமமும் வேண்டாத நாயகியே
பாதமுதற் கேசவரை பார்த்துனதுபதிகாண
நீதமருணின்மலியே நிர்க்குணியே நிலமீது
சாதமுறவருள்வாய்நீ சாந்தமிகுங் காமாக்ஷி. 17

அன்புருவாங் காமாக்ஷி யறிவுருவாங் காமாக்ஷி
நன்புருவாங் காமாக்ஷி நமனுருவாங் காமாக்ஷி
சென்றதலமிகவாகச் சேராத காமாக்ஷி
யுன்பதத்த யாம்பணிய வுதவி வரந்தாராயே. 18



வேறு

நீதாநிமலா நிசமான நிசமே வடிவாங் கோவிந்த
னாதாவெனவே நாடோறு நன்றாயுரைத்து நின்றாலுந்
தாதாவுனது தனிவடிவவைத்தந்தாலுனது தாயெனவே
வேதாவெண்ண வேண்டுவனோ விண்ணாலெழுந்த வேதகியே.

வேறு

செப்புனாதசிதம்பர தேசிகனே
றப்புமுற்ற தயாபரனாலய
மப்பணநலூராகிடுமம்மையென்
கொப்புளாகுறுங்குண்டலி கூடுமே. 20

வாழி நாரணன் றங்கையும்வானவர்
வாழி தேசிகர் வந்துறுமம்பிகை
வாழி பூசை வழிதெரிந்தாற்றினர்
வாழி யென்று வழங்குவர் வாழியே. 21

ஓம் தத் சத்

ஓம் தத் ஸத்



# ஸ்ரீ வேங்கடேசத் திருப்பதிகம்

பொன்பூத்த திருமார்பும் புயங்கணான்கும்
பொதியவிழ் செந்தமரைமென் போதுபோலத்
தென்பூத்த திருமுகமுங்கிரண சோதித்
தினகரனேர் மணிமுடியந் தெரியக்காட்டி
மின்பூத்த கரியமழை மேகமென்ன
வெளியாகி யடியன் விலைவிலக்கியாள்வாய்
மன்பூத்த வாயிரவாய்ச் சேடனான
மலையுறையு நீலமணிவண்ணத் தானே. 1

இலையிலேயிடுஞ் சோற்றுக் கேங்கியேங்கி
யெஞ்ஞான்றும் பலவினைகளீட்டி யீட்டி
நிலையிலா நில்லாத மனந்தான் சென்ற
நிலைமையிலே யிதுகாற நீந்தலொண்ணா
அலையிலே துரும்பாகி யலைந்தேனந்தோ
வருள்புரிந்து வடியனென வாள்வாய்சேட
மலையிலே யொரு நீலமழையே போல
வதிந்தருளு மானந்த வடிவந் தானே. 2



வன்பிறவி தனைநீக்கும் வகையுந் தேரேன்
மனக்குரங்கை வசப்படுத்த மாட்டேனந்தோ
என்பிறவி யெடுத்தெழுதற் கெவராலாகு
மினிப்பிறவி யெடுக்காம லெதிரேவந்து
முன்பிறவி யெடுத் தாதியுனது பாத
முளரியிலே மனஞ்செல்ல முன்னின் றாள்வாய்
தன்பிறவிக் கரசு தருங்கருணைக் குன்றே
தடகநா மலையுரைந் தம்பி ரானே. 3

எல்லையிலாப் பிறவிதொரு மிடையீ ன்றி
யினிய மொழி நடையழகா லிணஷவேற் கண்ணான்
முல்லை முகை முறுவலினான் மாதரார்த
மோக மெனுங் கருங்கடலின் மூழ்விவிட்டேன்
வல்லையெடுத்துனது கரமலராற் றீண்டி
மயங்காதே யெனக்கருணை வைப்பாய் கொல்லோ
அல்லைநிகர் திருமேனி யழகா வென்று
மாயிரவாய்ச் சேடகிரி யமர்ந்துளானே. 4

நீனானென்றுரைத் திடுவர் நானீ யென்பர்
நிகிலமெலா மாயையிது நினைப்பே யென்பர்
மானாங் காரமொடு பூத மென்பர்
மனமாதி கரணத்தின் சலன மென்பர்
தானான வகையறியார் தமையு நோக்கார்
தத்வமஸி யென்பரிது ஜால மன்றோ
வானாதி யுலகனைத்து மாகி நின்று
வளர் சேடமலையுறையும் வாசத் தானே. 5

உனைக்கணமு நினைத்து நினைத்துருக மாட்டே
னுனது திருக்கோயில்வல முவந்து செய்யேன்
மனைக்கணி ருந்தறம் புரியேன் வாழ்நாளெல்லாம்
வாளாமுற் றறிவிலியாய்வாழ்ந்தே னந்தோ
அனைத்துலக மனவரதம் பணிந்து போற்று
மரவநெடுங்கிரி யுரையு மாதி நாதா
பனைக்கை நெடுங்கரிக் கருளுங் கரியகோலப்
பாற்கரனே யடலாழிப் படையினானே. 6

எட்டாத செழுங்கனியே யின்பத் தேனே
யெழுதரிய திருமேனி யெம் பிரானே
சுட்டாத சுயஞ்சுரே சுருதிக் கெட்டாத்
துரியநிலை கடந்தொளிருஞ் சுயம்பே யாவும்
விட்டார் களரந்தரங்க விமான மேறி
விளையாடும் பரம்பரனே விரும்பி நாளு
நாட்டார் கடமைப்புரக்கு ஞானக் குன்றே
நாகமலைக் கொழுந் துனையே நம்பினேனே. 7

பாலனென விளையாடும் பருவ நீங்கிப்
பாவையர் களதி மோகப் பரவைமூழ்கி
வேலனைய விழி மயககான் மயங்கிவீழ்ந்து
வேலைவாய்த் துரும்பாகி மெலிந்து தேம்பிக்
காலன கர்குறுகி மனங்கலங்கா வண்ணங்
கருணைமழை பொழிந்தெனையுங் காப்பாய் கொல்லோ
ஆலமுமி ழரவகிரி யதனின் மேவு
மருளாளா திருமகள் வாழாகத் தானே. 8



காட்டிலே யுறைந்து மலைக்குகை வாய்வைகிக்
கனனடுவே யிருந்துபல கால நீங்கி
ஏட்டிலே யிருந்த தெல்லாம் படித்திட்டாலு
மெட்டுவகை யோக மெலா மியற்றிட்டாலும்
ஓட்டிலே யெழுதுமெழுத் தொழிவ துண்டோ
வுனதருட் கண்பாரவை சிறிதுளதே லென்றும்
வீட்டிலே குடியிருந்தாற் பழுது ண்டாமோ
வெற்பரசா முரககிரி மேனானே. 9

பஞ்சவர்கண் மறுபடியுற் பவித்தார் கொல்லோ
பாஞ்சாலி தனக் காடை பண்ணினாயோ
அஞ்சவித்த முனிவர் வச மாய்விட்டாயோ
வானாலுமென்ன வெனையாள் தற்கம்மா
வஞ்சகமா நீ மறந்தால் யாவர் காப்பார்
மரகதமா மலைபோல வயங்குவோனே
கஞ்சமலர்புரையுமெழி கண்ணா ஞானக்
கடலமுதே யுரகிரிக் கருணை வாழ்வே. 10

தெருளூடு தெளிந்தமன முகத் தினோடு
தேவா முதுண்டவருந் தேங்கிநிற்கும்
அருளூறு முனதடியே யடைய நில்லா
வறிவிலேன் விலக்ஷணானந்த னென்பான்
கருவூடு நெடுங்காலங் கார்த்த கோலக்
காக்ஷியதை யறிந்திட் டானினி மேலேனு
மிருளூடு விசையவிடா தருள்வா யீச
வெம்மாதி சேடமலை யெம்பிரானே. 11

ஓம் தத் ஸத்

ஓம் தத் ஸத்

**ஓம் ஹராம் ஹ்ரீம் க்லீம் ஓம் நமஸ்ரீ வேங்கடேசாய.**

## வாழித் திருநாமம்

இருடியரசீசன் வாழ்க என்பிரான் கண்ணன் வாழ்க
திருவளர் மார்பன் வாழ்க தினகரன் னொளியூடுள்ளே
ஒரு பொருளொருவன் வாழ்க உத்தம தெய்வம் வாழ்க
நிருவிகல்பத் துணிற்கு நெறிய நாரணனார் வாழ்க
மாதவ முகுந்தன் வாழ்க மலர்மிசை வந்த தேவி
பூதலக்கிழத்தி வாழ்க புவிமிசை அடியர் வாழ்க
சாதக முனிவர் வாழ்க சத்துவ தேவர் வாழ்க
நீதியாம் வேங்கடேச னீள் திருவடியும் வாழ்க
திருமலை வாசன் வாழ்க தேவாதி தேவன் வாழ்க
பெரிய தோசீசன் வாழ்க பிரம்மாண்ட ஜோதி வாழ்க
துரிய மேலணுவாய் நிற்குந் தூயமா வேங்கடேசன் வாழ்க
திருவடி யிணைகள் வாழ்க திவ்ய நற்கருணை வாழ்க
சங்கரன் குமரன் வாழ்க சங்கரி முருகன் வாழ்க
துங்க மாதவனார் தெய்வச் சுடர்மணிமுருகன் வாழ்க
பொங்கிய வடிவேல் வாழ்க பூரண வள்ளி வாழ்க
எங்களெம் பெருமான் வாழ்க இசைபெறு மடியர் வாழ்க
இந்திரன் குமரி வாழ்க எழில் மிகுதேவர் வாழ்க
முந்திய வீரவாகு முதலவர் மறியும் வாழ்க
புந்தியிற் சேயன் வாழ்க புள்ளிமாமயிலும் வாழ்க
சொந்தமா மனுபவத்தைச் சுற்றிய பெரியோர் வாழ்க.



வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனாமமே
சூழ்க கையகமுந் துயர் தீர்கவே.

மாயன் வாழி மழைவண்ணன் வாழி வடமலையன் வாழி
மலர்மங்கையர் நேயன் வாழி மறை நிமலன் வாழி
நவநீதன் வாழி யருணீதிசேர் ஆயன் வாழி யெனதப்பன்
வாழியென தன்பன் வாழி யளையுண்ட செவ்வாயன் வாழி
மதுசூதன் வாழி நிலமங்கை வாழி யருள் வாழியே.

ஸ்ரீ வேங்கடேசாய மங்களம்.

## ஞான குருவைத் தேடல்

அளவில்லா நூல்களெல்லாம் கற்றுப் பார்த்தேன்
அம்பவியில் தேசமெலா மோடிக் கண்டேன்
களவில்லாப் பெரியவரைக் கண்டுங் கேட்டேன்
காசினியில் முனிவர்களை அண்டிப் பார்த்தேன்
உளமெலிந்த யோகியரை உற்றுப் பார்த்தேன்
உறங்குகின்ற ஞானியரை உள்ளே பார்த்தேன்
அளப்பறிய பரம்பொருளை யறிந்தாரில்லை
ஐயையோ என்செய்வேன் என் செய்வேனே.

காது கண் வியாதிகட்கே காசினியியெல்லாம் சுற்றி
வியாதியைப் போக்குகின்றார் விதிமுறை யிதுவேயாகும்
சாதக ஜீவான்மாவைப் பற்றிடுஞ் சனனநோய்க்கு
பூதலஞ் சுற்றலோடும் பூரணம் கற்றல் வேண்டும்.

உள்ளத்தி லுணர்வுற்ற ஞானிதன்னை
உடலாலு முறையாலு மொளியினாலும்
தெள்ளத்தன் நடையாலுந் தெளிந்த கண்ணால்
சேராத உலகநிலையடையாத் தோற்றம்
மெள்ளத்தான் றாவுகின்ற வகில வஞ்சம்
மேலெழுந்த உட்பிரியமிலாதவர்க்கு
தள்ளத்தானடக்கின்ற பத்து வார்த்தை
தானிதனால் முக்தனென வறிவீரம்மா.

ஊனுறுமிவ்வுடம்பு சாம்பலாகி உலகத்தே தெரியாது
மறைந்திட்டாலும்
தானாக வினைவந்து தடுத்திட்டாலும் தரணியுள
நோய்களெலாம் வந்திட்டாலும்
தேனாறு மெனதுமதம் செழித்து ஓங்க செய்கின்ற
வேலைதனை விடவேமாட்டேன்.